**அ.வ.எண். 13/2023**
**வா.சா.1 : சோளியம்மாள்**
**தேதி : 05.02.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எனக்கு ஆதார் அடையாள அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது மகளின் பெயர் தேன்மொழி. தேன்மொழி தமிழ்நாடு அரசு நூலகப்பிரிவில் மாவட்ட நூலக அதிகாரியாக பணியாற்றி வருகிறார் என்று சொன்னால் சரிதான். அவர் 30 வருடங்களாக மேற்சொன்ன அரசுப்பணியில் பணியாற்றி வருகிறார். எனக்கு திருமணமாகி சுமார் 68 ஆண்டுகள் இருக்குமா என்றால் இல்லை 54 வருடங்கள் இருக்கும். நீங்கள் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றும் உங்களுக்கு திருமணமாகி 68 ஆண்டுகள் ஆகிறது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு 21 வயதில் திருமணமானது. என் மகள் பிறந்ததை நான் பதிவு செய்துள்ளேன். என் கணவர் அரசாங்கத்தில் வேலை செய்தார். உங்கள் கணவர் பணியிலிருக்கும்போதே இறந்துவிட்டதால் அரசு கருணை அடிப்படையில் உங்கள் மகளுக்கு வேலை வழங்கினார்கள் என்று சொன்னால் சரிதான். உங்கள் மூத்த சகோதரருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் எப்பையாவது ஒருமுறை விசேஷத்தின் போது குடிப்பார். தாவா சொத்திற்கு நான்கெல்லை குறிப்பிடாததற்கு குறிப்பிட்ட காரணம் ஏதாவது உண்டா என்றால் காரணம் ஒன்றுமில்லை நான்கெல்லை தெரியும். 4 அயிட்டமாக 4 ஏக்கர் சொத்து உள்ளது. எத்தனை அயிட்டமாக விவரித்து தாவா சொத்து விவரத்தில் சொல்லியுள்ளேன் என்றால் தெரியாது. நீங்கள் திருமணம் ஆன தேதியிலிருந்து அனுபவித்தில் இல்லாததால் தான் தாவா சொத்திற்கு நான்கெல்லைகள் குறிப்பிடாமல் தாவா தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல நான் அனுபவித்தில் தான் உள்ளேன் நான்கெல்லைகள் தெரியும். தாவா தாக்கல் செய்வதற்கு 65 ஆண்டுகளுக்கு

முன்பாகவே திருமணமாகி சென்றுவிட்டீர்கள் என்றும் அதன்பிறகு தாவா சொத்தில் நீங்கள் அனுபவித்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்குரிய வருவாய் வரியில் என்னடைய பங்கும் செலுத்தியுள்ளதாக கூறியுள்ளீர்கள் எவ்வளவு பணம் கொடுத்ததாக குறித்து வைத்துள்ளீர்களா என்றால் ஞாபகமில்லை. நீங்கள் வருவாய் துறையில் வரி கட்டியதற்கான ஆவணங்களை நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொ்னனால் சரியல்ல. நீங்கள் தாவா சொத்திற்கு எந்த காலத்திலும் அனுபவித்தில் இல்லாததால் கிஷ்து செலுத்தியதில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாவா சொத்தில் அனுபவித்தில் இருந்து வந்ததற்கான ஆவணங்கள் உங்கள் வசம் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கு தாக்கல் செய்து ஒன்றரை வருடம் கழித்து நீங்கள் வருவாய் துறை ஆவணங்களில் உங்கள் பெயரை சேர்க்க வேண்டி வா.சா.ஆ.6 மனு கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.6 மனுவின் அடிப்படையில் உங்களுக்கு அறிவிப்பு வந்ததா என்றால் அறிவிப்பு எதுவும் பெறவில்லை. நீங்கள் தாவா சொத்தில் அனுபவித்தில் இல்லை என்று பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு தான் நீங்கள் வருவாய் ஆவணம் ஏற்படுத்த வேண்டி வா.சா.ஆ.6 மனு கொடுத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 கிரையத்திற்கு முன்பாகவே பாகப்பிரிவினை கேட்டு நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.8 ஆவணத்தின் மூலம் சொத்தை கிரையம் பெற்றவர் உங்களது தகப்பனாரின் வாரிசு என்ற நிலையில் மட்டும் தான் உங்களது பெயர் இடம்பெற்றுள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து எத்தனை வருடங்கள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் 2 வருடம் இருக்கும். உங்கள் சகோதரர் செல்லமுத்து மதுப்பழக்கத்தினால் குடும்பத்தை காப்பாற்றவில்லை என்றும் உங்கள் தகப்பனார் தான் குடும்பத்தை காப்பாற்றி

வந்தார் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு திருமணம் செய்த போது உங்களுக்கு 20 சவரன் நகை, 20000/- ரூபாய் பெட்டி பணம், 20000/- மதிப்புள்ள வீட்டு உபயோகப்பொருட்கள் வாங்கி கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்குரிய பாசன வசதி பற்றி தாவாவில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான் தாவா சொத்தில் போர், கிணறு உள்ளது மேலும் ஓட்டு வீடு ஒன்று உள்ளது. வீட்டிற்கும், போர்கிணற்றுக்கும் மின்சார வசதி உள்ளதா என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. என் தகப்பனார் இறந்து 25 வருடங்கள் ஆனது அதற்கு முன்பாகவே மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. என் தாயார் நல்லம்மாள் 30 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். என் தகப்பனார் இறந்த தேதி, மாதம், வருடம் தெரியாது. 1995 ஆம் ஆண்டு தை மாதம் பொங்கலன்று உங்கள் தகப்பனார், உங்கள் அண்ணன் ஆகியோர் சேர்ந்து வாய்மொழியாக குடும்ப ஏற்பாடு செய்துகொண்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி குடும்ப ஏற்பாட்டின் போது உங்கள் தகப்பனார் அவருடைய பாகத்தை உங்கள் சகோதரரிடமே வயது மூப்பு காரணமாக கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 1995, ஜனவரி மாதத்திலிருந்து உங்கள் சகோதரர் செல்லமுத்துவும், அவர் இறந்தபிறகு செல்லமுத்துவின் வாரிசுகளான பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் சகோதரர் செல்லமுத்துவிற்கு முருகேசன் என்ற மகன் இருந்து அவருடைய 25 ஆம் வயதில் திருமணமாகாமல் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். செல்லமுத்து 1995 குடும்ப ஏற்பாட்டுக்கு பிறகு தாவா சொத்துக்களின் மீது திருச்சி கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியுள்ளார் என்று சொன்னால் அவரது சொத்தின் மீது வாங்கியுள்ளார் நான் கையெழுத்து போடவில்லை. நீங்கள் தாவா சொத்தினை கூட்டா அனுபவித்து வரவில்லை எனறு

சொன்னால் சரியல்ல. நீங்கள் தாவா சொத்தை கூட்டாக அனுபவிக்காததால் நீங்கள் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்று சொன்னால் சரியல்ல. 1995 லிருந்து செல்லமுத்துவும், அவரது வாரிசுகளும் தாவா சொத்துக்களில் அனுபவத்தில் இருந்து வருவதால் நீங்கள் உடைமை நீக்கம் செய்யப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரயில்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.05 18:44:51 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.